**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 428–2026**
**வழக்கு சாட்சி. அ.சா.–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | அப்துல்லா | **வயது** | : | 30 /2026 |
| **தந்தை பெயர்** | : | சாகுல் அமீது | **தாலுகா** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | காவலர், அறந்தாங்கி காவல் நிலையம் |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade–III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**Accused present. Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1–Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**தேதி : 17.08.2026.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் அறந்தாங்கி காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.04.2026 ஆம் தேதி நானும் என்னுடன் பணிபுரியும் மாரிமுத்து என்பவரும், அறந்தாங்கி காவல் நிலைய உதவி ஆய்வாளர் நதியா என்பவரும் அறந்தாங்கி நகர் புற பகுதியில் ரோந்து சென்ற போது மாலை 17.30 மணியளவில் ஆளபிறந்தான் பேருந்து நிலையம் அருகே கண்காணித்தபோது அரசு அனுமதியின்று மதுபாட்டிகள் விற்பனை செய்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நின்று கொண்டிருந்த எதிரியை சந்தேகத்தின் பெயரில் விசாரித்ததில் அவர் ஓட முயற்சி செய்தவரைபிடித்து விசாரணை செய்த போது அவர் வைத்திருந்த பையில் 180ml அளவுடைய MClend பிராந்தி பாட்டில்கள்–26–யினை விற்பனை செய்யும் நோக்கில் வைத்திருந்ததால் உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரை தயார் செய்து பொதுமக்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால்

நானும், அப்துல்லா என்பவரும் கையொப்பம் செய்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார் விவரம் சொன்னேன். என் முன்னிலையில் மகஜர் தயார் செய்தார். கைப்பற்றுதல் மகஜர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கபடவில்லை உதவி ஆய்வாளர் பணி மாறுதலில் சென்றுவிட்டப்படியால் எங்கு வைத்தார் என்று தெரியவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

அறந்தாங்கி காவல் நிலையத்தில் 6 மாதங்களாக வேலை பார்த்து வருகிறேன். என்றால் சரிதான். ரோந்து செல்லும் பொழுது நாட்குறிப்பில் எழுதி வைப்பது வழக்கம் என்றால், ஆமாம். இவ்வழக்கு சம்பந்தமான ரோந்து பற்றி நான் நாட்குறிப்பு எதனையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு ரகசிய தகவல் கிடைக்கப் பெற்றதாக கூறப்படும் நேரத்தில் எங்கு இருந்தேன் என்றால், அறந்தாங்கியில் இருந்தேன். சம்பவ இடத்திற்கும் ஆளபிறந்தான் கிராமத்திற்கும் சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும். ரகசிய தகவல் எனக்கு கிடைக்கப் பெற்றதாக கூறும் நான் அது குறித்து ஏதேனும் உயர் அதிகாரிகள் பிறப்பித்த எழுத்துப்பூர்வமான அல்லது வாய்மொழியான உத்தரவு இருக்கிறதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. கைப்பற்றுதல் மகஜர் அறந்தாங்கி காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது கையால் எழுதப்பட்டதா என்றால், தட்டச்சு செய்யப்பட்டதாகும். சம்பவ இடத்திற்கு கணினி மற்றும் தட்டச்சு கருவி எடுத்துச் செல்லப்பட்டதா என்றால், இல்லை. வேறு ஒரு நபர் அங்கு எடுத்து வந்திருந்தார். மேலும் விவரங்களை எனது போலீஸ் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரிடமிருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால், சரியல்ல. எனது உயர் அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்துக்களை பகுப்பாய்வுக்கு அனுப்பவில்லை என்று சொன்னால், அது பற்றி எனக்கு தெரியவில்லை.

**மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஓம்/--.திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**பி.எஸ்.சி.,எல்.எல்.பி.,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**